மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (பொ) தொ அ.ஈ திட்டம், கோவை-05 அவர்களின்
நடவடிக்கை ஆணை

முன்னிலை: மரு.ந.காஞ்சனா,எம்.பி.பி.எஸ்.டி.ஏ.,

ந.க.எண்.12058/நி2/2021 நாள்:17.02.2022

பொருள்: நிர்வாகம் - திரு.க.வைரவன்,இளநிலை உதவியாளர், தொ.அ.ஈ.மருந்தகம்,காட்டூர்-1 -தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர் -தற்காலிக பணிவரண்முறை ஆணை வழங்குவது - தொடர்பாக.

பார்வை: 1)செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.2383/பிஎஸ்டி-12/2020 நாள் 21.07.2020.

2)சென்னை, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடித எண்.31495/நி2/2/2020 நாள் 05.08.2020

3)இயக்குநர்,மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,சென்னை-6 அவர்களின் ந.க.எண்.10378/தொ அ.ஈ/நி2/1/2020,நாள்:28.08.2020.

4)இவ்வலுவலக பணிநியமனம் மற்றும் பணியமர்வு ஆணை ந.க.எண்:5419/நி2/2020-7(வ.எண்.271),நாள்:10.09.2020.

5)பொறுப்பு மருத்துவ அலுவலர்,தொ.அ.ஈ.மருந்தகம்,காட்டூர்-1, ந.க.எண்:114/நி/2020,நாள்:28.10.2021.

*******

தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-4 தேர்வில் (2018-2019 மற்றும் 2019-2020)தேர்ச்சி பெற்றதையடுத்து,பார்வை-1-ல் காணும் கடிதம் வாயிலாக மருத்துவத்துறைக்கு ஒதுக்கப்பட்டு,பார்வை-2-(ம)3-ல் காணும் கடிதங்களின்படி இம்மண்டலத்திற்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.க.வைரவன் பார்வை-4-ல் காணும் இவ்வலுவலக பணிநியமனம் மற்றும் பணியமர்வு ஆணையின்படி,இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் வழங்கப்பட்டு,இம்மண்டலத்தின் கீழ் இயங்கும் காட்டூர்-1,தொ.அ.ஈ.மருந்தகத்தில் பணியமர்த்தப்பட்டு அன்னார் 16.09.2020 அன்று முற்பகல் அரசுப்பணியில் இணைந்துள்ளார்.

பார்வை-1-ல் காணும் கடிதத்தில்,வ.எண்:3-ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில்,அன்னாரது தற்காலிகப்பணிகள்,அவர் அரசுப்பணியில் இணைந்த நாளான 16.09.2020 முற்பகல் வரைண்முறைப்படுத்தப்பட்டு, மூன்றாண்டு கால தொடர்பணியில் இரண்டாண்டு காலத்தை தகுதிகாண் பருவத்தில் வைத்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. நடைமுறையில் உள்ள பணி விதிகளின்படி அன்னார் தனது தகுதி காண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும், அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்கான தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

-2-

அன்னாரது தற்காலிகப்பணிகளை வரண்முறைப்படுத்தும் இவ்வாணை, 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான ஒருகிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV -ல் சேர்க்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையிலும் நிலுவையிலுள்ள ரிட் மனுக்கள் மீதான முடிவிற்கு உடன்பட்டது.

மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (பொ),
தொ.அ.ஈ. திட்டம்,கோவை-05.

17.8.2022

பெறுநர்
திரு.க.வைரவன்,
இளநிலை உதவியாளர்,
தொ.அ.ஈ.மருந்தகம்,காட்டூர்-1- (உரிய வழியாக)

நகல்: பொறுப்பு மருத்துவ அலுவலர்,தொ.அ.ஈ.மருந்தகம்,காட்டூர்-1.
இத்துடன் இணைத்து அனுப்பப்படும் அன்னாரின் பணிபதிவேட்டில்,உரிய பதிவுகளை மேற்கொள்ளவும்,பணிபதிவேட்டை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகையை சமர்ப்பிக்கவும் கோரப்படுகிறது.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:
1) இயக்குநர்,மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள், சென்னை-6.

2) இயக்குநர்,மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் (தொ.அ.ஈ.) சென்னை-6.

நகல்: பணிப்பதிவேடு

உபரி:2

Scanned with OKEN Scanner